# community

The New Apostolic Church around the world

01/2016/Tamil

## குறிக்கோள் 2016
## கிறிஸ்துவினாலே வெற்றி



நியூசீலாந்து தேவாராதனை:
தேவன் நம்மோடு
உடன்படிக்கை செய்கிறார்

போதனாவிளக்கநூல்:
இயேசுகிறிஸ்துவின் சபை

போதனாவிளக்கநூல்:
ஊழியம்

New Apostolic Church
International

# கிறிஸ்துவினாலே வெற்றி



NAC International

அன்பின் சகோதர சகோதரிகளே,

வருகிற புருவருடத்திற்காக தேவ ஆசீர்வாதங்களை என் இதய ஆழத்திலிருந்து உங்களுக்கு ஆசிகூறுகிறேன்.

- தேவனுடைய அருகாண்மையையும் ஒத்தாசையையும், உணர்வீர்களாக.
- அவரது அன்பையும் அவர் உங்களைச் சுமப்பதையும் உணர்வீர்களாக.
- அவரது கிருபையை அனுபவிப்பீர்களாக

வருடக்கடைசியில், பின்னோக்கிப்பார்த்து நமக்குள் கேட்டுக்கொள்வது நல்லது: “எத்தனை தூரம் எனது இலக்கை நான் நெருங்கி வந்திருக்கிறேன்?”

இதற்கு ஒரு எளிமையான வழி உள்ளது. தூரத்திலிருந்து ஒரு கட்டடத்தை அண்மிப்பதாக கற்பனைசெய்வோம். முதலில் அது மிகச்சிறியதாக தென்படும். ஆனால் அதற்கு மிக அருகில் வரும்பொழுது அது மிவும் பெரியதாகத் தோன்றும். அதை மிகவும் தெளிவாய் காணமுடியும்.

கர்த்தருடன் என்றென்றைக்கும் தங்கியிருப்பது நம் இலக்காகும். கடந்த வருடத்தில் எத்தனை சமீபமாக இந்த இலக்கருகில் வந்திருக்கிறோம்? முந்திய வருடத்தைவிட கடந்த வருடத்தில் இயேசு நமக்கு பிரதானமாய் தென்பட்டாரா? அவரது இயல்பை சிறப்பாக நாம் அறிந்துகொண்டோமா? முன்னேறும் பாதையில் இடைப்பட்ட இலக்குகளையும் நாம் அமைத்துக்கொண்டோம்: “அன்பினால் செயற்படுதல்”, 2014ல் நம் இலக்காயிருந்தது. கடந்த வருடத்தில் “கிறிஸ்துவில் மகிழ்ச்சி;”; என்பது நம் இலக்காயிருந்தது.

அடுத்த அடியை இப்பொழுது எடுத்து வைப்போம். தம்மிடமிருந்து நம்மைப் பிரிக்க முனைகிறவற்றை எதிர்த்துப் போராடுவதற்கான சக்தியை வசனத்தாலும் தேவசடங்கினாலும் தேவன் தருகிறார். இப்போராட்டதில் வெற்றியடையும் வல்லமையை வழங்குகிறார். கிறிஸ்து வினாலே நாம் வெற்றியடையமுடியும்.

- பிசாசை ஜெயங்கொள்வதற்கு கிறிஸ்து உதவுகிறார். பிசாசை அவர் அழித்தொழிக்கவில்லை. ஆனால், பிசாசை அவர் கீழ்ப்படுத்துகிறார்.

- பயத்தை வெல்வதற்கு கிறிஸ்து நமக்கு உதவுகிறார். இவ்வருடத்திலும்கூட நாம் எதிர்காலத்தைப்பற்றி பயப்படக்கூடும். நமக்கு என்ன நேரிடும் என்ற குழப்பம் சில தீர்மானங்களின் அடிப்படையில் வரக்கூடும். ஆயினும் இயேசு நம்மை நடத்துவார்.

- நாம் நம்மை ஜெயங்கொள்வதற்கும் கிறிஸ்து உதவுகிறார்.உதாரணமாக,
  – தேவ உதவியை நாம் பெறுவதற்கு தடையாயிருக்கும் நமது தற்பெருமையை ஜெயங்கொள்ள உதவுகிறார்.
  – நம் அயலாரை நாம் நேசிப்பதற்கு தடையாயிருக்கும் நியாயந்தீர்த்தலை ஜெயங்கொள்ள உதவுகிறார்.
  – விளைவுகளையும், சமாதான இழப்புகளையும் பொருட்படுத்தாமல் நமது அபிப்பிராயங்களை முன்வைக்கும் சுபாவத்தை ஜெயங்கொள்வதற்கு உதவுகிறார்.

கிறிஸ்துவினாலே எவ்வாறு வெற்றியடையமுடியும்?

- இயேசுவின் சத்தியத்தை விசுவாசிப்பதன்மூலம்.
- அவர் நேசித்ததைப்போல் நாமும் நேசிப்பதன்மூலம்.
- எது நேரிடினும் அவருடன் நிலைப்பதன்மூலம்.
- ஐக்கியத்தில் ஒருமைப்பாட்டை நாடுவதன்மூலம். .

நமது புதிய குறிக்கோளுக்கான சில சிந்தனைகள் இவை! இதை ஆழமாய் சிந்தித்துக் கைக்கொள்வதற்கு, இலக்கின் வழியில் மேலும் ஒரு அடியெடுப்பதற்கு ஒரு முழு வருடமும் இருக்கிறது. 2016 “கிறிஸ்துவினாலே வெற்றி” அடையும் ஒரு வருடமாய் அமைவதாக!

உங்கள்



# தேவன் நம்முடன் ஒரு உடன்படிக்கை பண்ணுகிறார்



கிட்டத்தட்ட 900 பேர் ஆக்லாந்து நகரில் நடந்த தேவாராதனையில் நேரில் பங்கேற்றனர். மேலும் 1100 பேர் நியூசிலாந்தின் தென்தீவிலும், ஆஸ்திரேலியா, பிஜி, மற்றும் பப்புவா நியூ கினி நாடுகளிலும் ஒலிபரப்பு மூலம் இணைக்கப்பட்டனர்.

NAC Australia

உபாகமம் 5:3

“அந்த உடன்படிக்கையைக் கர்த்தர் நம்முடைய பிதாக்களுடன் பண்ணாமல், இந்நாளில் இங்கே உயிரோடிருக்கிற நம்மெல்லாரோடும் பண்ணினார்.”

பிரியமான என் சகோதர சகோதரிகளே, இங்கு நியூசிலாந்துக்கு நான் முதற்தடவையாக வந்திருக்கிறேன். நியூசிலாந்து ஒரு அற்புதமான தேசம் என்று மாவட்ட அப்போஸ்தலரும் சகோதரர்களும் என்னிடம் கூறினார்கள். இந்நாட்டில் எதையும் நான் பார்த்திருக்கவில்லை. ஆனால், அவர்கள் கூறியதை நான் விசுவாசிக்கிறேன். இங்கு அற்புதமான சபைக்கூட்டங்களும் உண்மையுள்ள சகோதர சகோதரிகளும் இருப்பதையும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதையும் நான் விசுவாசிக்கிறேன். அதை உண்மையில் என்னால் இங்கு கண்டு உணரமுடிகிறது.

நேற்று சிறுபிள்ளைகளை சந்தித்தோம். ஞாயிறு வகுப்புப்

பிள்ளைகள் தங்கள் வருடாந்த சுற்றுலாவிலே பங்கேற்று மகிழ்ந்தார்கள். ''என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கி றேன்'' என்பதை தங்கள் சுற்றுலாவின் பொன்மொழியாக பிள்ளைகள் கொண்டிருந்தார்கள். பண்டிகையில் இயேசு காணாமற்போய், பின்பு பெற்றோர்களால் கண்டுகொள்ளப் பட்டபொழுது, அவர் கூறியதை இப்பொன்மொழி ஞாபகப் படுத்தியது. ''என் பிதாவுக்கடுத்த வைகளில் நான் இருக்கவேண்டிய தென்று நீங்கள் அறியீர்களா?'' (லூக்கா 2:49). இது நம்மெல்லோ ருக்கும் பொருந்தும். நம் பிதா வுக்கடுத்தவைகளில் செயற்படுதல் இடைவிடாத நமது கடமையெனக் கருதவேண்டும். ஆனாலும், நாம் ஆலயத்துக்கு வந்துமட்டும், புதிய அப்போஸ்தல சபையின் செயற்பாட்டில் ஈடுபடவேண்டும் என்று இது அர்த்தமாவதில்லை.

''என் பிதாவுக்கடுத்தவைகளில்'' என்று கூறப்பட்டதன் அர்த்தத்தை சற்று ஆராய்வோம். நமது பிதா வின் காரியங்கள் எவை? தீமைகள், அநீதி, மரணம் முதலியவற்றிலிருந்து சகல மனிதரையும் விடுதலைபண்ணுதல் பிதாவின் காரியமாய் விளங்குகிறது. இதற்காகவே அவர் தீவிரமாய் கிரியை நடத்துகிறார். ஒவ் வொருவரும் கிறிஸ்துவுடன் தொடர்புகொள்ளவேண்டும் என்பதிலும், கிறிஸ்துவை விசுவாசித்து முடிவில் அவரால் இரட்சிக்கப்படவேண்டும் என்பதிலும் பிதா கருத்தாயிருக் கிறார். அதுவே நம் பிதாவின் காரியம். இதில் நாம் உதவி செய்வதற்கான கடமையும் சந்தர்ப்பமும் நமக்கு தரப்படுகி றது. நாம் இரட்சிக்கப்படுகிற சாத்தியத்தைக் கொண்டி ருக்கிற அதேவேளையில், பிறருடைய இரட்சிப்பிற்கு தேவனுக்கு உதவிசெய்யக்கூடி ய சிலாக்கியத்தையும் நாம் கொண்டிருக்கிறோம். தேவனு டைய காரியத்தை இவ்வாறு காண்கையில், இதை நான் ஒரு கடமையாக சிந்திக்கவில்லை. அதற்கு மாறாக இதை நான் சந்தோஷத்திற்கும் ஆசீர்வாதத் துக்குமான ஆதாரமாகக் காண் கிறேன். எனவே, சகோதர சகோதரிகளே, பிள்ளைகள் மட்டுமல்லாமல் நாம் அனைவருமே பிதாவுக்கடுத்தவைகளில் ஈடுபாடுகொள்வதற்காக அழைக்கப்படுகிறோம்.

**தேவனுடைய உடன்படிக்கை நம் மூதாதையருக்காக மட்டும் பண்ணப்படவில்லை. இன்று உயிரோடிருக்கும் நமக்காகவும் பண்ணப்பட்டது.**

இஸ்ரவேலர்களுக்குக் கூறப்பட்ட ஒரு வேதவசனத்தை நாம் கேட்டோம். தேவன் தம் ஜனங்களுடன் பண்ணிய உடன்படிக்கையை அது குறிப்பிடுகிறது. தேவன் ஒரு ஜனத்தைத் தெரிந்துகொண்டார். அந்த ஜனமாகிய இஸ்ரவேலர் ஒரு பெரிய ஜாதியாகவோ, பலவான்க ளாகவோ அல்லது பிரதானமான வர்களாகவோ இருக்கவில்லை. இந்த ஜனங்களைத் தெரிந்துகொள் வதற்கு ஏதுவான எந்த காரணமும் உண்மையில் இருக்கவில்லை. ஆனால், அதை அன்பினாலும் கிரு பையினாலும் தேவன் புரிந்தார். ஒரு உடன்படிக்கையை அவர்களு டன் பண்ணினார். முதலில் அவர் களைப் பார்வோனிடமிருந்தும் எகிப்தியரிடமிருந்தும் மீட்டார். ஓரேப் மலையில் அவர்களிடம் கூறினார்: ''சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்தச் சம்பத்தாயிருப்பீர்கள்'' (யாத்திராகமம் 19:5). அதுவே உடன்படிக்கையின் முதற்பாகம். சிவந்த சமுத்திரத்துக்கு ஊடாக அவர்களை நடத்தி எகிப்தியரிடமிருந்த அவர்களை காப்பாற்றினார். அவர்களுக்களாக அவர் ஆயத்தமாக்கும் எதிர்காலத்தைப்பற்றி நேரடியாக அவர்களுக்குக் கூறினார். வாக்குறுதி வழங்கி தன் திட்டத்தை அறிவித்தார். பாலும் தேனும் ஓடுகிற தேசத்தில் அவர்கள் பிரவேசிக்கவேண்டும். தம் கட்டளையை அறிவித்து உரைத்தார்: இக்கட்ட ளையின்படி நடப்பீர்களெனில் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்!



தலைமை அப்போஸ்தலரை சிறுபிள்ளைகள் கீதம் பாடி வரவேற்றனர்



மாவட்ட அப்போஸ்தலர் பார்னஸ் (பலிபீடத்தில்), மாவட்ட அப்போஸ்தல உதவியாளர் டேவிட் தேவராஜ் மற்றும் ஜோன் ஃபென்ட் ஆகியோரும் தேவாராதனையில் பிரசங்கித்தனர்

ஜனங்கள் விடுதலைபண்ணப்பட்டதும், சிவந்த சமுத்திரத்திலே தப்பிவந்ததும், உடன்படிக்கையும், ஓரேப் மலையில் சம்பவித்தவையும் நீண்ட காலத்திற்கு முன்னதாக நடந்தவை. அவற்றுக்கு சாட்சியானவர்கள் யாவரும் மரித்துவிட்டார்கள். மோசேயையும் மற்ற ஒரு சிலரையும் தவிர, இச்சம்பவங்களுக்கு சாட்சியானவர்கள் எவரும் இருக்கவில்லை. தேவனுடைய சத்தத்தைக் கேட்டவரில் அநேகர் உயிரோடிருக்கவில்லை. இப்பொழுது மோசே கூறுவதைக் கேட்கிறவர்களில் அநேகர் முன்பு நடந்ததை கேள்விப்பட்டவர்கள் மாத்திரமே.

> இயேசு உங்களுக்காக மரித்தார், உங்களுக்காக உயிர்த்தெழுந்தார், உங்களை இரட்சிப்பதற்கு மறுபடியும் வருகிறார்

முதியோர் நமக்கு கூறுகிறவற்றைக் கேட்கிறபோது, அவை மிகைப்படக் கூறப்படுவதாகவே அடிக்கடி சிந்திக்கிறோம். நாம் நேரில் அனுபவித்திராத ஒன்றைப்பற்றி பிறர் கூறுவதில் எத்தனை உண்மை இருக்கக்கூடும் என்று சிந்திக்கிறோம். ஆனால், தான் கூறியது உண்மையாகவே சம்பவித்தவை என்று இஸ்ரவேலர்களிடம் மோசே நிச்சயமாய் கூறினான்: தேவன் தண்ணீரைப் பிளந்து சிவந்த சமுத்திரத்தின் ஊடாக ஜனங்கள் கடந்துபோகப்பண்ணினார். தேவன் தாமே மலையின்மேல் பேசினார்.

மேலும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தைக் குறித்துக் கூறப்பட்டது. ஜனங்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தை நெருங்கிவிட்டதை அறிந்தார்கள். ஆயினும் அதை அடைவதற்காக யுத்தமிடவேண்டும் என்பதையும் அறிந்தார்கள். அவர்கள் ஏற்கனவே வனாந்தரத்தைக் கடந்து வந்துவிட்டார்கள். "நாங்கள் வந்தடைந்த இடம் நல்லது, எனவே இங்கேயே இருந்துவிடுவோம். எங்கள் பிதாக்கள் வனாந்தரத்தில் இருந்தபடியால் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தை வாஞ்சித்தார்கள். அங்கே பசியும் பஞ்சமும் இருந்தது. எனவே அவர்கள் ஒரு நல்ல தேசத்தை வாஞ்சித்தார்கள். ஆனால் "நாங்களோ வனாந்தரத்தைக் கடந்துவிட்டோம். எதற்காக நாங்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்துக்குள் பிரவேசிக்கவேண்டும்?" என்று கருதினார்கள்.

இதை மேசே அறிந்திருந்தான். ஆதலால் அவன் கூறினான்": " அந்த உடன்படிக்கையைக் கர்த்தர் நம்முடைய பிதாக்களுடன் பண்ணாமல், இந்நாளில் இங்கே உயிரோடிருக்கிற நம்மெல்லாரோடும் பண்ணினார்." ஜனங்கள் இப்பொழுது வனாந்தரத்தில் வசிக்கவில்லை, அவர்கள் மற்ற ஜனங்களோடு தொடர்புகொண்டவர்களாய் வாழ்கிறார்கள் என்பதை மோசேயும் அறிந்திருந்தான். மற்ற ஜனங்கள் முற்றிலும் வித்தியாசமான வாழ்க்கை நியதியைக் கொண்டிருந்தார்கள். இதனால் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் குறித்து இஸ்ரவேலர்களிடத்தில் சந்தேகம் வந்திருக்கமுடியும். பிற ஜனங்கள் பன்றி இறைச்சியைப் புசித்தார்கள். அதையும் இதையும் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். வித்தியாசமான வாழ்க்கை பிரமாணத்தைக் கொண்டிருந்தாலும் பிற ஜனங்கள் நன்றாய் வாழ்ந்திருந்ததை இஸ்ரவேலர்கள் நோக்கினார்கள். எனவே, தாங்கள் எதற்காக நியாயப்பிரமாணத்தைக கடைப்பிடிக்கவேண்டும் என்று எண்ணினார்கள்.



இதனாலேயே மோசே கூறவேண்டியவனானான்: " அந்த உடன்படிக்கையைக் கர்த்தர் நம்முடைய பிதாக்களுடன் பண்ணாமல், இந்நாளில் இங்கே உயிரோடிருக்கிற நம்மெல்லாரோடும் பண்ணினார்."

இப்பொழுது புதிய உடன்படிக்கைக்கு வருவோம். பழைய உடன்படிக்கையின் தொடர்ச்சியாக புது உடன்படிக்கை விளங்குகிறது. தம்முடையவர்களை பலியின்மூலம், உயிர்த்தெழுதல் மூலம் இரட்சிப்பதற்கு தேவன் தமது குமாரனை அனுப்பினார். அவரது சீஷர்கள் அதற்குச் சாட்சியாயிருந்தார்கள். இயேசு அவர்களுக்கு வாக்குத்தத்தம் வழங்கினார். " நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" (யோவான் 14:3). இயேசு தம் கட்டளைகளையும் சுவிசேஷத்தையும் கொடுத்து, அவற்றைக் கைக்கொண்டால் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று கூறினார். இது இரண்டாயிரம் வருடத்திற்கு முன்னர் நடந்தது இது இன்று எப்படி காணப்படுகிறது?

உயிர்தெழுந்தவரை நேரில் கண்டதாக இன்று எவரும் கூறமுடியாது. "இயேசுவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் குறித்துக் கூறப்படுகிறவைகள் உண்மைதானா என்ற சந்தேகம் இன்று கிறிஸ்தவர்கள் மத்தியிலும் நிலவுகிறது. அதைக் கட்டுக்கதை என்றும்கூடக் கூறுகிறார்கள். அதை ஒரு உருவகமாகவும், கற்பனையாகவும் கருதுகிறார்கள். அவர் உண்மையில் மரித்தார், பின்பு உயிர்த்தெழுந்தார் என்பதை விசுவாசிக்கக்கூடாது என்பதே இதற்கு அர்த்தமாகிறது. நமது இரட்சிபிற்காக ஒருவர் மரித்தார் என்பதை எண்ணுவது சற்று மிகைப்படுவதாய் காணப்படுகிறது! இது நம் காலத்தில் நிலவும் ஒரு அபாயமாகும்.



கிறிஸ்துவின் பலியையும் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் சாட்சியிடுவதற்கு இன்று புது உடன்படிக்கையின் ஊழியமாகிய அப்போஸ்தல ஊழியம் அனுப்பப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை விசுவாசியுங்கள்! அது சத்தியம். இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல் என்பவற்றைக் குறித்து வேதாகமம் கூறுவது சத்தியமானது. இதுவே நமது விசுவாசம். இதை அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவுக்கு ஸ்தானாதிபதிகளாய் சாட்சியிடுகிறார்கள். இயேசு அவர்களுக்குக் கட்டளை கொடுத்தார்: " உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான்" (மத்தேயு 10:40). ஆதலால்,

அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் அதிகாரத்தினால் பிரசங்கிக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் சகலருக்கும் சத்தியத்தை அறிவிக்கவேண்டியவர்களாய் விளங்குகிறார்கள்: இயேசு உங்களுக்காக மரித்தார். இன்று இங்கு உயிரோடிருக்கும் உங்களுக்காக மரித்தார். அவருடைய உடன்படிக்கை உங்களுக்கு பிரத்தியேகமாய் சேர்கிறது.

இவை யாவும் உங்களுக்காக, உங்களுடைய இரட்சிப்பிற்காக நடந்தது. இயேசு உங்களுக்காக மாண்டார். உங்களுக்காக உயிர்த்தெழுந்தார். உங்களை மீட்பதற்காக மறுபடியும் வருகிறார். இந்த உடன்படிக்கையையே தேவன் உங்களுடன் பண்ணியிருக்கிறார். புது உடன்படிக்கையின் ஊழியத்தின் கடமையும் இதுவே. எங்கள் ஆண்டவர் எங்களுக்குத் தந்திருக்கும் இக்கடமையை நிறைவேற்றுவதில் அப்போஸ்தலர்களாகிய நாங்கள் சோர்வடையமாட்டோம். இயேசுகிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் அவர் மறுபடியும் வந்து நம்மை மீட்டுக்கொள்வார் என்பதையும் நாம் விசுவாசிக்கிறோம். நாம் தேவராஜ்யத்தில், அவரின் மகிமையில் பிரவேசித்து தேவனுடன் நித்திய ஐக்கியத்தைப் பெறுவோம் என்று அவர் வாக்குறுதி தந்தார்.

இச்செய்தி நமது மூதாதையருக்கே உகந்தது என்று சிலர் கருதுகிறார்கள். அவர்களுக்கு சிரமமான ஒரு வாழ்க்கையும், உயிர்வாழ்வதில் பிரயத்தனமும், வறுமையும், நோய்களும், அபாயங்களும் மிகுந்திருந்தது என்று சிந்திக்கிறார்கள். ஒருநாள் ரட்சிப்பு வரும், அப்பொழுது நிலைமை மாறும் என்ற நம்பிக்கை அவர்களுக்குத் தேவைப்பட்டது என்று நினைக்கிறார்கள்.

இன்று நமக்கு சிறந்த மருத்துவ வசதிகள் உள்ளதால், எதிர்காலத்தைப் பற்றின பயம் நமக்கு இல்லை. பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் உண்டு. நமது நாட்டில் சமாதானம் நிலவுகிறது. எனவே, பரலோகத்தின்சிறப்பானஎதிர்காலத்தைநாம்தேடவேண்டிய அவசியம் இல்லை என்று சிலர் கருதுகிறார்கள். நமக்குத் திறமையும் துணிவும் இருக்கிறபொழுது இங்கு பூமியில் ஒரு சிறந்த வாழ்க்கையை நம்மால் அமைத்துக்கொள்ளமுடியும் என்கிறார்கள். இவ்விதம், தேவனுடன் நித்திய ஐக்கியத்தை அடையும் வாஞ்சை நமது சமுதாயத்தில் நலிவடைந்துவிட்டது. அநேகருக்கு இதில் ஆர்வம் கிடையாது.

எவ்வாறாயினும், புது உடன்படிக்கையில் தேவகுமாரனை மகிமைப்படுத்தவும், பிரசங்கிக்கவும் பரிசுத்த ஆவியானவர் தேவனால் அனுப்பப்படுகிறார். அவர் தேவனுடைய மகிமையை நமக்கு அறிவித்து, கிறிஸ்துவைப்பற்றின அறிவுக்கு நம்மை நடத்துகிறார். அவரைக் குறித்து இயேசு கூறினார்: ''அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்'' (யோவான் 16:14).

கிறிஸ்து யார் என்பதையும் அவருடைய மகிமையையும் நமக்குப் போதித்து, கிறிஸ்துவைப்பற்றின அறிவிலும், கிருபையிலும் நம்மை வழிநடத்துவது பரிசுத்த ஆவியின் கடமையாய் விளங்குகிறது. நாம் கற்பனைபண்ணும் எதையும்விட அவருடைய மகிமை மேன்மையானது. தேவனோடு நமக்கு கிடைக்கும் ஐக்கியம் நம்மால் கிரகிக்க முடியாத அற்புதமான ஒன்றாய் விளங்கும். ''கிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தை விசுவாசியுங்கள், இயேசுவைப் பின்பற்றுங்கள். அது பெறுமதியானது. தேவராஜ்யம், அவரது மகிமை, அவருடன் நித்திய ஐக்கியம் என்பவற்றுக்குச் செல்லும் வழியில் செல்வது நல்லது. '' என்று பரிசுத்த ஆவி நமக்குக் கூறுகிறார். புது உடன்படிக்கையின் ஊழியமான அப்போஸ்தல ஊழியம் பரிசுத்த நற்கருணை கொண்டாடுவதற்கான கட்டளையையும் கொண்டிருக்கிறது. பரிசுத்த நற்கருணை கொண்டாடும் ஒவ்வொரு தடவையும் நாம் தேவனுடன் உடன்படிக்கையைப் புதுப்பிக்கிறோம். இயேசுகிறிஸ்துவை எத்தனை சிறப்பாய் நாம் அறிந்துகொள்கிறோமோ அத்தனை சிறப்பாய் அவரை நாம் நேசிக்கிறோம், அவருடன் ஐக்கியத்தை வாஞ்சிக்கிறோம். பரிசுத்த நற்கருணையின் சிறப்பான அர்த்தம் இதுவாகும். இயேசு கூறினார்: ''நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என்



தலைமை அப்போஸ்தலர் ஷ்னைடர் மரித்தோருக்காக நற்கருணை வழங்குகிறார்



இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். (யோவான் 6:53-54).

தேவராஜ்யத்தில் நித்திய ஜீவனும் நித்திய ஐக்கியமும் நாம் பிரயத்தனப்படுவதற்கு பெறுமதியானது. நாம் கற்பனைபண்ணு வதற்கும்முடியாத இது, உலகின் எதனா லும் ஒப்பிடமுடியாதது. "நான் ஒரு உண் மையுள்ள கிறிஸ்தவன், தேவபிள்ளை, தேவனை விசுவாசிக்கிறேன், முடிந்த அள வுக்கு நன்மைசெய்கிறேன்" என்று கூறுதல் மாத்திரம் போதுமானதல்ல. தேவராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு தேவா ராதனைகளில் இயேசு வழங்கும் சத்துண வை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். இங்கு அப்போஸ்தலர்கள் கிரியை நடத்துகிறார் கள். வாக்குத்தத்த தேசத்தில் சஞ்சரிக்கும் பலத்தை இஸ்ரவேலர் மன்னாவின் மூலம் பெற்றார்கள். தேவாராதனைக்கு வருமாறு வற்புறுத்துவது என்பது என்னுடைய நோக்கமில்லை. இருந்தாலும், உண்மையை என்னால் கூறாதிருக்கமுடியாது. கிறிஸ்துவின் நாளுக்கு ஆயத்தமடைந்து, தேவனுடன் நித்திய ஐக்கியத்தில் பிரவேசிப்பதற்கு பரிசுத்த நற்கருணை கொண்டாடுதல் இன்றியமையாதது.

மோசே அன்று சந்தித்த அபாயம் இன்றும் நிலவுகிறது. மனிதர் கூறுகிறார்கள்: "தேவனுடைய பிரமாணங்களும் கட்டளைகளும் சுவிசேஷமும் நல்லதே. ஆயினும் ஏராள மான மற்றவர்கள் வேறு காரியங்களில் சிந்தையாயிருக்கிறார்கள். நம்மைவிட அவர்கள் நன்றாய் வாழ்கிறார்கள்." ஆனால் இயேசு கூறினார்: "என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்கிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்." (யோவான் 14:21). வாழ்க்கையில் வெற்றியடைவதற்கு சுவிசேஷம் நமக்கு அவசியமாவதில்லை, அதற்கு வேறு வழிகள் உள்ளன. ஆனால், இயேசுவின் அன்பையும் கருணையையும், சமீபத்தையும் அனுபவிக்கவும் அவரை அறியவும் நமக்கு ஒரு வழியே உள்ளது: சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்து நமது அன்றாட வாழ்வில் அதைக் கடைப்பிடித் தல். அதிக வருவாய் பெறுவதற்கும், நோய்களிலிருந்து குணமடைவதற்கும், நமது பிள்ளைகள் சீர்பொருந்துவதற்கும் நாம் சுவிசேஷத்தைக் கடைப்பிடிப்பதில்லை. இயேசுவின் அன்பை அனுபவிப்பதற்காக நாம் தேவகட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறோம். இயேசு நம்மேல் பிரியமாய் நமக்கருகில் இருப்பதை நாம் உணர விரும்புகிறோம்.

அவருடைய புது உடன்படிக்கை நமது மூதாதையருக்காய் பண்ணப்படவில்லை. இன்று உயிரோடிருக்கும் நமக்காக அது பண்ணப்பட்டது. கிறிஸ்து நமக்காக மரித்தார், நமக்காக வருகிறார் என்று நாம் அறிவோம். இந்த உடன்படிக்கையை அவர் நம்முடன் உண்டாக்கினார். இதற்காகவே நாம் தேவாராதனைகளுக்கு வருகிறோம், நற்கருணை கொண்டாடுகிறோம். கர்த்தர் நமக்குக் காட்டும் வழியில் பின்பற்றுவோம். கீழ்ப்படிவுடன் சுவிசேஷத்தை நம் வாழ்வில் கடைப்பிடிப்போம். எதுவும் இங்கு புதியதாய் கூறப்படவில்லை என்பதையும் நான் அறிவேன். இருப்பினும் இன்றைய வசனம் குறிப்பாக உங்களுக்காக கூறப்படுகிறது. உங்கள் வாழ்வில் இது மாற்றத்தை உண்டுபண்ணுவதாக.

## பிரதான சிந்தனைகள்

இயேசுகிறிஸ்து நமக்காக மரித்தார், நம்மை அவருடன் கூட்டிச்செல்வதற்காக மறுபடியும் அவர் வருகிறார் என்று நாம் விசுவாசிக்கிறோம்.

நமது நித்திய வீட்டை நாம் வாஞ்சித்து அதை அடைவதற்காக பரிசுத்த நற்கருணையை பாத்திரவான்களாய் ஆசரிக்கிறோம்.

இயேசுவின் சமீபத்தை அனுபவிப்பதற்காக தேவகட்டளையை நாம் பின்பற்றுகிறோம்.

# சிருஷ்டிப்பு

## (ஆதியாகமம் 1)

சிருட்டிப்பின் வரலாறுதான் வேதாகமத்தின் முதற்கதை. வானம், பூமி, தாவரங்கள், மிருகங்கள் மற்றும் மனிதரை தேவன் சிருஷ்டித்ததை அது எடுத்துரைக்கிறது.

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். பூமியானது இருளும் வெறுமையுமாய் இருந்தது; தேவன் ஒளியை உண்டாக்கி ஒளியையும் இருளையும் வெவ்வேறாகப் பிரித்தார். வெளிச்சத்துக்குப் பகல் என்று பேரிட்டார், இருளுக்கு இரவு என்று பேரிட்டார். பின்பு, தரையையும் தண்ணீரையும் பிரித்தார். தண்ணீர் நதிகளாகவும, குளங்களாகவும், சமுத்திரங்களாகவும் மாறிற்று. பின்னர் புல்பூண்டுகளையும் பூக்களையும் மரங்களையும் உண்டாக்கினார்.அவைகள் தளிர்த்து கனிகொடுத்தன. பூமி அழகாய் காட்சியளித்தது. சூரியன், சந்திரன், நட்சத்திரங்களை வானத்தில் வைத்தார். தண்ணீரில் மீன்களையும், நிலத்தில் மிருகங்களையும், பறக்கும் பறவைகளையும் தேவன் சிருஷ்டித்தார். பின்பு சகலவித பிராணிகளும் படைக்கப்பட்டன. கடைசியாக ஆணும் பெண்ணுமாக மனிதர் சிருஷ்டிக்கப்பட்டனர். அவர்கள் பலுகிப்பெருகி மற்ற சிருஷ்டிகளை ஆண்டுகொள்ள வேண்டியவர்களானார்கள். தாம் சிருஷ்டித்த ஒவ்வொன்றையும் நல்லது என்று தேவன் கண்டார். பின்பு, தேவன் ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்.



உலகம் எவ்வாறு உண்டானது என்பதற்கு இரண்டு கதைகள் பைபிளில் உள்ளன. ஆதியாகமத்தின் முதற்பகுதியில் அவற்றைக் காணமுடிகிறது. சிருஷ்டிப்பின் பல்வேறு கிரமங்களை முதலாம் பகுதி எடுத்துக்கூறுகிறது. தேவனுடைய சாயலில், ஆணும் பெண்ணுமாக  முதலாம் மனிதர் சிருஷ்டிக்கப்பட்டதாக முதலில் கூறப்பட்டது. இரண்டாம் கதையில், பெண்ணானவள் ஆணின் விலா எலும்பிலிருந்து உண்டாக்கப்பட்டாள் என்று கூறப்படுகிறது. இந்த இரண்டாம் குறிப்பே பழமையானது.

Mirella Fortunato



# நெம்பி நகரில் கமிலாவின் வீட்டில் (பரகுவாய்)




private

என் பெயர் கமிலா. எனக்குப் ஒன்பது வயது. பரகுவாய் தேசத்தில் வசிக்கிறேன். இந்நாடு தென் அமெரிக்காவில் உள்ளது. பழங்குடியினர் பேசும் மொழியான குவரானி மொழியில் இதற்கு, “தண்ணீரை நோக்கிச் செல்லும் தண்ணீர்” அல்லது “கடலைப் பிரசவிக்கும் நதி” என்று அர்த்தம் கூறப்படுகிறது. பிறேசில் நாட்டின் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லும் றியோ பரகுவாய் பெருநதியின் பெயர் இந்நாட்டுக்கு சூட்டப்பட்டிருக்கிறது.இந்நதியின் மேற்கில் அமைந்துள்ள கிறான்சாக்கோ பிரதேசத்தில் கோடைகாலத்தில் 45 பாகை செல்சியஸ் வெப்பநிலை நிலவுகிறது. இங்கு கால்நடைப் பண்ணைகள் அதிகமுண்டு. மழை அதிகம் பெய்யும் கிழக்குப் பகுதியில் அடர்ந்த மழைக்காடுகளும் உள்ளன.



கொறித்துத் திண்ணும் மிருகங்களில் மிகப்பெரிய வகை மிருகமான காபிபாறா மிருகங்கள் றியோ பரகுவாயில் அதிகம் உள்ளன. ஒரு மீட்டர் நீளத்துக்கு வளரக்கூடிய இவை சுமார் 60 கிலோ எடை உள்ளவை. தாவரவுண்ணி பிராணிகளான இவை நீரப்பன்றிகளைப் போன்ற தோற்றமுடையவை.





உங்களுக்காக ஒரு குதிரை மற்றும் யானையின் படங்களை நான் வரைந்திருக்கிறேன். சித்திரங்கள் வரைதல் எனது பொழுதுபோக்குகளில் ஒன்று.

நான் பெரியவளாகி ஒரு சித்திர ஆசிரியையாகவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். பரகுவாயில் ஒன்பதாம் வகுப்பு வரைக்கும் ஒவ்வொருவரும் கல்வி கற்கவேண்டும் என்பது கட்டாயம். நான் இப்பொழுது நான்காம்



வகுப்பில் கற்கிறேன். ஸ்பானிஷ் மற்றும் குவரானி மொழிகள் கட்டாய பாடங்களாகும். வயலின் வாசிக்கவும் கற்கிறேன். என் அக்கா வெரோனிக்காவும் வயலின் மீட்டுவாள். அவள் பல வருடங்கள் இசை பயில்கிறாள். வெரோனிக்கா பாட்டுக்குழுவிலும் இருக்கிறாள். அவளுக்கு 18 வயதாகிறது.
இது ஃபெர்னான்டோ டி மோராவில் உள்ள எங்கள் ஆலயம். என் அம்மா ஓய்வுநாள்



வகுப்பு நடத்துகிறார். ஐந்து பிள்ளைகள் படிக்கிறார்கள். ஆலயத்திலிருந்து 20 கி.மீ. தூரத்தில் எங்கள் வீடு உள்ளது.




என் தந்தை ஏர்னஸ்டோ அவர்கள் குடாட் டெல் ஏஸ்ட நகரின் சபைப் பொறுப்பாளர். எங்கள் வீட்டிலிருந்து 324 கி.மீ. தொலைவில் அது உள்ளது. ஒவ்வொரு வார இறுதியிலும் அவர் அங்கு செல்கிறார். அந்நகரம் பரகுவாயின் இரண்டாம் பெரிய நகரமாகும். நாங்கள் நெம்பி நகரில் வசிக்கிறோம். எங்கள் நாட்டின் பெரிய நகரம் இதுவாகும். தென் அமெரிக்காவில் பழமையான நகரங்களில் இதுவும் ஒன்று. இதன் உண்மையான பெயர் மிக நீண்டது: லா மய் நோபிள் யலீல் குடாட் டி நொய்ஸ்ட்றா செனோறா சாந்த மரியா டெ லா ஆசன்சியோன்.

# தபால்பெட்டி



## புதுவருடத்தை எவ்வாறு ஆரம்பிக்கிறாய்?

"என் பெற்றோரும் சகோதரனும் பட்டாசு கொளுத்தி புதுவருடத்தை ஆரம்பிக்கிறோம்."
மத்தியாஸ், வயது 12, மொன்டேவிடியோ, உறுகுவாய்

"என் குடும்பத்தாருடன் சேர்ந்து புதுவருடத்தை ஆரம்பிக்கிறேன். நடக்கவிருக்கும நல்லவைகளைப் பற்றி ஆலயத்துக்குச் சென்று சிந்திப்பேன்."
சந்தியாகோ, வயது 7, லா கொருனா, ஸ்பெயின்



"அடுத்தவருடம் குதிரைச்சவாரி செய்ய விரும்புகிறேன்."
ப்றீடறிக், வயது 5, கோனிக்ஸ்டன், ஜேர்மனி



"அழகிய நாய்கள் வளர்க்கும் என் அத்தையிடம் செல்வேன்."
கிறிஸ்டியன், வயது 8, கோனிக்ஸ்டன், ஜேர்மனி


Oliver Rütten

# இயேசுகிறிஸ்துவின் சபை

புதிய அப்போஸ்தல சபையின் போதனாவிளக்கநூல் வினாவிடை வடிவத்தில் 2015 செப்டம்பரில் வெளிவந்தது. அதிலுள்ள 750 வினாவிடைகளில் சிலவற்றை கம்யூனிட்டி சஞ்சிகை பிரசுரித்துவருகிறது. இந்த இதழில் இயேசுகிறிஸ்துவின் சபையையும் ஊழியத்தின் கருத்தையும் பற்றி வாசிக்கிறோம்.

"சபை" என்பதன் பொதுவான அர்த்தம் யாது?

பொதுவாக மூன்று வித்தியாசமான அர்த்தங்களை இதில் நாம் காண்கிறோம். ஒருபக்கத்தில் கிறிஸ்தவர்களின் வழிபாட்டுஸ்தலம் (ஆலயம்) என்று கூறப்படுகிறது. அங்கு தேவாராதனையில் விசுவாசிகள் கூடிவருகிறார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்தின் சபைக்கூட்ட ஆலயமாக சபையானது காணப்படுகிறது. மேலும், ஒரு கிறிஸ்தவ சமூகத்தை (மதப்பிரிவை) சுட்டிக்காட்டுவதாகவும் இது விளங்கப்படுகிறது.

ஒரு கிறிஸ்தவ மதப்பிரிவு என்று கூறப்படுவது லத்தீன் அடிப்படையில் ஒரு சமய சமுதாயத்தைக் குறிக்கும்.

சபை அவசியமானதா?

ஆம். கிறிஸ்தவராயிருக்கிறவர்களுக்கு சபையானது அவசியமாயிருக்கிறது. ஏனெனில், அங்கு நாம் தேவனுடைய வார்த்தையைக் கேட்கிறோம், தேவசடங்குகளைப் பெற்றுக்கொள்கிறோம். மொத்தமாக, ரட்சிப்பை அடைந்துகொள்ள இந்த மூலாதாரங்கள் நமக்கு இன்றியமையாதவை. சபையில்லாமல் மனிதர் இவற்றைப் பெறமுடியாது.

இயேசுகிறிஸ்துவின் சபையின் காணமுடியாத பக்கத்தை எவ்வாறு நாம் அனுபவிக்கிறோம்?
பல்வேறு காரியங்களின் நடுவிலும், சபையின் காணமுடியாத பக்கத்தை அதன் இரட்சிப்பின் விளைவுகளில் அனுபவிக்கிறோம். இவை இயற்கைக் கண்களுக்குப் புலப்படாதவை; விசுவாசத்தினால் மட்டுமே இதை பற்றிக்கொள்ளமுடியும்.

உதாரணத்திற்கு பின்வருமாறு இரட்சிப்பின் விளைவுகளை நாம் அனுபவிக்கிறோம்

- பாவங்களை தேவன் மன்னிக்கிறபொழுது,
- ஞானஸ்நானத்தின் மூலம் சந்ததிப் பாவங்கள் கழுவி நீக்கப்படுகிறபொழுது,
- பரிசுத்த ஆவியின் வரத்தை தேவன் தரும்பொழுது,
- பரிசத்த நற்கருணையில் கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமும் வழங்கப்படும்பொழுது,
- தேவசடங்குகள் மரித்தோருக்கு வழங்கப்படும்பொழுது,
- ஆசீர்வாத நடபடிகள் (திடப்படுத்தல், ஊழியநியமனங்கள் முதலியன) நிகழும்பொழுது,
- பிரசங்கத்தில் மனித வாய்மொழியில் தேவன் செயற்படும்பொழுது,
- சபையின்மேல் தேவாசீர்வாதம் வைக்கப்படும்பொழுது.

இயேசுகிறிஸ்துவின் சபையின் காணமுடிந்த பக்கத்தை எவ்வாறு நாம் அனுபவிக்கிறோம்?
மற்ற பல காரியங்களின் நடுவில், சபையில் மனிதர் நிறைவேற்றும் கிரியைகளில் சபையின் காணமுடிந்த பக்கத்தை நாம் அனுபவிக்கிறோம். உதாரணமாக,

- மனிதர் இயேசுவை அறிக்கைபண்ணும்பொழுது,
- தேவாராதனைகள் ஆசரிக்கப்படும்பொழுது,
- ஞானஸ்நானத்திற்காக தண்ணீர் புனிதப்படுத்தப்படுத்தப்படும்பொழுது, ஞானஸ்நானம் நிறைவேற்றப்படும்பொழுது,
- அப்பத்தையும் திராட்சரசத்தையும் ஊழியக்காரர்கள் புனிதப்படுத்தி, பரிசுத்த நற்கருணை வழங்கும்பொழுது,
- விசுவாசிகள்மேல் அப்போஸ்தலர்கள் கைவைத்து, பரிசுத்த முத்திரையிடும் தேவசடங்கை நிறைவேற்றும்பொழுது,
- ஊழியக்காரர்கள் பிரசங்கிக்கிறபொழுது,
- விசுவாசிகள் ஜெபிக்கிறபொழுது,
- அன்பு கைக்கொள்ளப்படுகிறபொழுது.

கிறிஸ்துவின் சபையை அடையாளப்படுத்தும் சிறப்புகள் எவை?
காணமுடிந்ததும் காணமுடியாததுமான கிறிஸ்துவின் சபை நான்கு சிறப்புகளை உடையது. ஒருமைப்பாடு, பரிசுத்தம், பிரபஞ்ச வியாபகம், அப்போஸ்தலத்துவம்.

கிறிஸ்துவின் சபையின் ஒருமைப்பாட்டைக் குறித்துப் பேசுகையில் எதை அர்த்தப்படுத்துகிறோம்?
ஒரே தேவனானபடியினால் சபையும் ஒன்றே. தேவனாகிய பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகியோர் ஒன்றானவர்களாய் கிரியைசெய்கின்றனர். தம்மைப் பின்பற்றுகிறவர்களின் ஒன்றாயிருத்தலையும், அவர்களுக்குள் நிலவும் அன்பையும், அவர்கள் தம்முடையவர்கள் என்பதை வெளிப்படுத்தும் சிறப்பாக இயேசு கூறினார். சபையில் தேவனின் இயல்பு வெளிப்படும் வழியும் அதுவாகும்: "தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்." (1 யோ. 4:16).

இயேசுகிறிஸ்துவின் சபையின் பிரபஞ்ச வியாபகம் என்பது எந்த அர்த்தத்தைத் தருகிறது?
தேவன் உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோருக்கும் சகலருக்கும் தேவனாயிருக்கிறார். கிறிஸ்துவின் சபை இதனால் பிரபஞ்ச வியாபகமாய் விளங்குகிறது. சுவிசேஷ அறிவிப்புக்கு எல்லை இருப்பதில்லை.

கிறிஸ்துவின் சபையின் அப்போஸ்தலத்துவம் எதை அர்த்தப்படுத்துகிறது?
அப்போஸ்தல உபதேசம் சபையில் உபதேசிக்கப்படுவதால், அப்போஸ்தல ஊழியம் சபையில் செயற்படுவதால் சபை அப்போஸ்தல சபையாய் விளங்குகிறது.

கிறிஸ்துவின் சபையை எங்கு அனுபவிக்கலாம்?
ஒருமைப்பாடு, பரிசுத்தம், பிரபஞ்ச வியாபகம், அப்போஸ்தலத்துவம் பிரசன்னமாயிருக்கும் இடத்தில் கிறிஸ்துவின் சபையை அனுபவிக்கமுடியும். அப்போஸ்தல ஊழியமும், ஜீவிக்கிறவர்களுக்கும் மரித்தோருக்கும் தேவசடங்குகள் வழங்குதலும் நிலவும் இடத்தில் கிறிஸ்துவின் சபை தெளிவாய் வெளிப்படும். அங்குதான் கர்த்தருடைய மீட்பின் கிரியை வெளிப்படும். இவ்வாறு பரலோகக் கலியாணத்திற்கு மணவாட்டி ஆயத்தமடைகிறாள்.

தனிப்பட்ட கிறிஸ்தவ மதப்பிரிவுகள் எதைப் பொதுவில் வெளிப்படுத்துகின்றன?
தனிப்பட்ட கிறிஸ்தவ மதப்பிரிவுகளை இணைக்கும் மூலாதாரங்களாக பிதா, குமாரன், பரிசுத்தஆவியினாலே வழங்கப்படும் ஞானஸ்நானமும், கிறிஸ்துவை ஆண்டவராக அறிக்கைபண்ணுதலும், திரியேக தேவனை விசுவாசித்தலும் உள்ளன. விசுவாசத்தை வாழ்ந்து, கிறிஸ்துவை ஆண்டவராக அறிக்கைபண்ணும் ஞானஸ்நானம்பெற்றவர் மூலமாக, சபையானது விசுவாசம், நம்பிக்கை, அன்பு என்பவற்றின் ஐக்கியமாய் அனுபவிக்கப்படமுடியும்.

Publisher: Jean-Luc Schneider, Überlandstrasse 243, CH-8051 Zurich/Switzerland
Verlag Friedrich Bischoff GmbH, Frankfurter Str. 233, 63263 Neu-Isenburg/Germany
Editor: Peter Johanning



NAC Cape

# ஊழியம்

ஊழியம் என்று கூறப்படுவதன் அர்த்தம் என்ன?
பொதுவாக "Ministry-அமைச்சகம்" என்ற சொல்லை ஒரு குறிப்பிட்ட பொறுப்பையும் கடமையையும் உடைய உத்தியோகபூர்வ நிலையென நாம் விளங்கிக்கொள்கிறோம். மேலும், அந்நிலையை உடையவர்கள் சமூகத்தை நடத்துவதற்கும், முடிவெடுப்பதற்கும் அதிகாரம் பெறுகிறார்கள்.

ஆவிக்குரிய ஊழியத்தின் ஆதாரம் எது?
தேவனாகிய பிதா இயேசுகிறிஸ்துவை அனுப்பியதில் ஆவிக்குரிய ஊழியத்தைக் கண்டுகொள்கிறோம். இதனால், இயேசுகிறிஸ்துவே தேவனால் அனுப்பப்பட்டவர். இவ்விதம் அவர் மனிதஇனத்தின் மீட்புக்காக உத்தரவுபெற்றார், ஆசீர்வதிக்கப்பட்டார், பரிசுத்தப்படுத்தப்பட்டார். இயேசுவினால் அப்போஸ்தலர்கள் அனுப்பப்பட்டனர். ஆதலால், ஊழியமும் அப்போஸ்தலத்துவமும் ஒன்றிணைந்தவை. அப்போஸ்தல ஊழியம் செயற்படும் இடங்களில் ஆவிக்குரிய ஊழியம் பிரசன்னமாயிருக்கும்.

"அப்போஸ்தலத்துவம்" என்னும் பதம் ஆதியில் அப்போஸ்தல ஊழியத்தைக் கொண்டிருந்த யாவரையும் சுட்டிக்காட்டுவதாயிருந்தது. (அப்போஸ்தலத்துவம் = இயேசுவின் அப்போஸ்தலர்கள்). ஆசாரிய ஊழியர்களும், உதவிக்காரர்களும் அப்போஸ்தலத்தின் உத்தரவைப் பெற்று, ஆன்மீக பராமரிப்பிலும், உபதேசித்தலிலும், தேவசடங்குகளை வழங்குவதிலும் ஈடுபட்டார்கள்.

ஆவிக்குரிய ஊழியத்துக்காக உத்தரவுபெறுதல் என்பதன் அர்த்தம் என்ன?
இயேசுகிறிஸ்துவின் கட்டளையின்படி ஒரு அப்போஸ்தலனால் வழங்கப்படுவது ஆவிக்குரிய ஊழியமாகும். ஆதலால் இந்த ஊழியத்தைப் பெறுகிறவர் அப்போஸ்தலரின் அதிகாரத்தின் ஒரு பாகத்தைப் பெறுகிறார். அதன்மூலம் அப்போஸ்தலரின் பேரில் செயற்படுகிறவராய், ஊழியத்தில் அது பிரதிபலிக்கும்வண்ணமாக ஊழியர்கள் செயற்படுகிறார்கள்.

அதிகாரத்தின்படி செயற்படுதலின் உதாரணங்கள்:
பாவமன்னிப்பை அப்போஸ்தலர்கள் அறிவிக்கிற

பொழுது, இயேசுகிறிஸ்து அளித்த அதிகாரத்தின் அடிப் படையில் அதைச் செய்கிறார்கள். இக்காரணத்தினால், அப்போஸ்தலர்கள் பின்வரும் வார்த்தைகளில் பாவ மன்னிப்பை அறிவிக்கிறார்கள்: "உங்களுக்கு ஒரு நற்செய்தியை நான் அறிவிக்கிறேன். நம்முடைய கர்த்தரும் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனுமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன."

இயேசுகிறிஸ்துவின் சபையில் ''ஊழியஞ்செய்தல்'' என்பதன் அர்த்தம் என்ன?

அயலார்மேல் கொள்ளும் அன்பிலும், தன் விசுவாசத்தை அறிக்கைபண்ணுதலிலும் கர்த்தரைச் சேவிப்பதற்கு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு விசுவாசியும் அழைக்கப்படுகிறார். (யோவான் 12:26). விசுவாசிகளின் நன்மைக்காகவும், சுவிசேஷ அறிவிப்புக்காகவும் பயன்தரக்கூடிய குறிப்பிட்ட தருணங்களில் கிறிஸ்துவின் சபையின் விசுவாசிகள் புரியும் சேவையை ஊழியஞ்செய்தலாய் நாம் விளங்கிக்கொள்கிறோம். ஞானஸ்நானம்பெற்ற விசுவாசிகள் இயேசுகிறிஸ்துவில் தங்களுக்குள்ள விசுவாசத்தை அறிக்கைபண்ணும்பொழுதெல்லாம் அப்படிப்பட்ட ஊழியஞ்செய்தல் நடக்கிறது.

கிறிஸ்துவின் சபையில் ஆவிக்குரிய ஊழியத்துக்கும் ஊழியஞ்செய்தலுக்கும் வித்தியாசம் என்ன?

நியமனம் இன்றி நிறைவேற்றப்படும் ஊழியஞ்செய்தல் ஆவிக்குரிய ஊழியத்திலிருந்து வித்தியாசப்படுகிறது.

இயேசுகிறிஸ்துவினால் நிறுவப்பட்ட ஊழியம் எது?

இயேசுகிறிஸ்து தமது சபையில் அப்போஸ்தல் ஊழியத்தை நேரடியாக நிறுவினார். அவர் அப்போஸ்தலர்களுக்குக் கட்டளையிட்டு, அவர்களை ஆசீர்வதித்து, பரிசுத்தப்படுத்தி பரிசுத்தஆவியினால் நிரப்பினார்: ''பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி, அவர்கள்மேல் ஊதி: பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்; எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் என்றார்'' (யோவான் 20:21-23). தேவசடங்குகளை நிறைவேற்றும் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தார். இவ்விதமாக அவரது தியாகபலியில் மனிதர் பிரவேசிக்கமுடிந்தது.

தேவசடங்குகளை நிறைவேற்றும் அதிகாரம் அப்போஸ்தலர்களுக்கு வழங்கப்பட்டதன்மூலம், அதற்கான கட்டளையை இயேசுவிடமிருந்து அவர்கள் பெற்றனர். எல்லா தேவசடங்குகளும் அப்போஸ்தலர்களினால் நேரடியாக நிறைவேற்றப்படாவிடினும்கூட, அவை அப்போஸ்தல ஊழியத்தில் தொடர்புள்ளதாய் நிறைவேற்றப்படுகின்றன.

புதிய உடன்படிக்கையின்படி, பரிசுத்தஆவியை வழங்குகிறவர் யார்?

அப்.8:15-18ல்பரிசுத்தஆவியைவழங்குதல்அப்போஸ்தல ஊழியத்தினால் நிறைவேற்றப்பட்டதைக் காண்கிறோம். சமாரியாவில் பிரசங்கித்த பிலிப்பு தண்ணீரினால் ஞானஸ்நானம் கொடுத்தான். இதைக் கேள்வியுற்ற அப்போஸ்தலர்கள் பேதுருவையும் யோவானையும் அங்கு அனுப்பினார்கள். அந்த இருவரும், ''வந்தபொழுது அவர்களிலொருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள், அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்.'' அப்.19:6 அதைக் கோடிடுகிறது: ''பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தாவி அவர்கள்மேல் வந்தார்.''

அப்போஸ்தலர்களின் மற்ற முக்கிய கடமைகள் எவை?

அவர்கள் நடுவில் செயற்பட்ட கிறிஸ்து, மரித்து உயிர்த்தெழுந்தார் என்பதை அறிவித்தல் அப்போஸ்தலரின் பிரதான கடமையாயிருந்தது (அப். 13:26-41;17:1-4). இதற்கு மாறான கருத்துள்ளவர்களை எதிர்த்துப் போராடினார்கள் (1 கொரிந்தியர் 15:3-8; 1 யோவான் 4:1-6).

அப்போஸ்தலர் நியமித்த முதலாவது ஊழியம் எது?

தங்கள் கட்டளையை நிறைவேற்றத் தொடங்கிய அப்போஸ்தலர்கள் பெந்தெகொஸ்தே நாளில் சுவிசேஷம் பிரசங்கித்தார்கள். தங்களுக்கு உதவியாளர்கள் தேவைப்படுவதை அவர்கள் உணர்ந்தார்கள். அக்கடமைக்காக ஏழு பேர் தெரிந்துகொள்ளப்பட்டனர். அவர்கள்மேல் கைவைத்து ஜெபித்து, அவர்களை ஆசீர்வதித்து பொறுப்பு வழங்கினார்கள். முதலாம் உதவியாளர்களாய் அவர்கள் கூறப்படுகிறார்கள்.

"அவர்களை அப்போஸ்தலருக்கு முன்பாக நிறுத்தினார்கள். இவர்கள் ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள்." (அப் 6: 6).

புதிய அப்போஸ்தல சபையில் உள்ள ஊழியங்களும் அவற்றின் நிலைகளும் எவை?

ஆவிக்குரிய மூன்று நிலைகளில் புதிய அப்போஸ்தல சபை ஊழியங்கள் அமைகின்றன. அப்போஸ்தல ஊழியம், ஆசாரிய ஊழியம், உதவிக்கார ஊழியம்.

- தலைமை அப்போஸ்தலர், மாவட்ட அப்போஸ்தலர், அப்போஸ்தலர் ஆகியவை அப்போஸ்தல ஊழியம்
- கண்காணி, மாவட்டமூப்பன், மாவட்ட சுவிசேஷகன், மேய்ப்பன், சுவிசேஷகன், ஆசாரியன் ஆகியவை ஆசாரிய ஊழியங்கள்
- உதவிக்காரன் - உதவிக்கார ஊழியம்.